கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමුපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Kanniya Road, Varothaya Nagar, Trincomalee

Our Ref:- NP/15/03/Co-op city    Your Ref:-    24    01.04.2009

சுற்றறிக்கை 02/2009

தலைவர்,
மன்னார் ப.நோ.கூ.சங்கம்

## சிறிய சிறப்பு விற்பனை நிலையங்கள் (Mini co-op City) அமைய இருக்கும் கிளைக்குழுக்களை பலப்படுத்தல்

சிறிய சிறப்பு விற்பனை நிலையங்கள் (Mini Co-op City) அமைய இருக்கும் கிளைக்குழுக்களைப் பலப்படுத்தும் முகமாக கிளைக்குழுவிற்கு அதிகாரங்களை வளங்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சின் 15.01.2009ம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இச்செயற்பாட்டின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே இவ்விற்பனை நிலையத்திற்கான உதவிகள் வழங்கப்படும் எனவும் மேற்படி அமைச்சின் செயலாளருடன் 05.03.2009 திகதி நடைபெற்ற கலந்துரையாடலில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய சிறிய சிறப்பு விற்பனை நிலையங்கள் (Mini Co-op City) அமைக்கப்படும் கிளைகளின் கிளைக்குழுக்களைப் பலப்படுத்தும் வகையில் பின்வரும் விடயங்களை சங்கஉபவிதியில் கிளைக்குழுக்களின் அதிகாரங்கள் என்னும் பிரிவின் கீழ் உள்ளடக்கி (பழைய உபவிதி இலக்கம் 25இல் ஏற்கனவே குறிப்பிடப்பட்டவை 25.1 எனவும் கீழ் குறிப்பிடப்படும் திருத்தங்கள் 25.2 எனவும் அமைதல் வேண்டும். புதிய உபவிதி இலக்கம் 28.7இல் ஏற்கனவே குறிப்பிடப்பட்டவை 28.7.1 எனவும் கீழ் குறிப்பிடப்படும் திருத்தங்கள் 28.7.2 எனவும் அமைதல் வேண்டும்) திருத்தங்களை மேற்கொள்வதற்கு எனது முன் அனுமதியினை இத்தால் வழங்குகின்றேன். இதற்கமைய சங்க பொதுச்சபையில் எதிர்வரும் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்து இதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. அங்கத்தவரின் கொள்வனவு வலுவை அதிகரிப்பதை நோக்கமாகக்கொண்டு அங்கத்தவரிடமிருந்து ரூபா 1000/= இற்கு குறையாத கொள்வனவு வைப்பை ஏற்படுத்துதலும் இவ் வைப்பிற்கு எதிராக அங்கத்தவர்களுக்கு கடன் விற்பனையை வைப்புத் தொகைக்கு மேற்படாமல் ஏற்படுத்திக்கொள்ளலும் கிளைக்குழுக்கள் தீர்மானித்துக்கமைய கடன் உச்சஎல்லை தீர்மானிக்கப்படலாம்.

2. என்னென்ன விற்பனைப்பொருட்களை எந்தளந்த அளவில் கையிருப்பாக வைத்திருத்தல். எவ்விடங்களில் இருந்து எந்த அடிப்படையில் அவற்றினை வாங்குதல் அவற்றிற்கு பணம் செலுத்துதல் ஆகியன பற்றிய கொள்வனவுக்கொள்கையை கிளைக்குழுவின் தீர்மானத்திற்கமைய தலைமைக்காரியாலயமும் இயக்குனர்சபையும் தீர்மானித்து செயற்படவேண்டும்.

☎-CCD & RCS – 060 2264646    Gen – 060 2264645    Fax – 026 2226951/4/6/7 – Ext - 244

3. இவ்விற்பனை நிலையத்திற்கு தேவையான பொருட்களின் கொள்வனவு தொடர்பாக கிளைக்குழு உறுப்பினர்களிலிருந்து ஒருஉபகுழு ஒன்று அமைக்கப்படல் வேண்டும். இந்த உபகுழுவின் செயலாளராக கிளைமுகாமையாளர் கடமையாற்றவேண்டும். சங்கத்தின் இயக்குனர்சபை உறுப்பினர் உபகுழுக்கூட்டங்களின் போது சமூகமளித்து ஆலோசனைகளை வழங்கலாம். அந்தந்த கிளைகளுக்கான பொருட்கொள்வனவு தேவைகளை படிவம் 23A மூலம் வெளிப்படுத்தல் வேண்டும். அதற்கமைய பொருட்கொள்வனவு செய்யப்பட்டு கிளைக்கு வழங்கப்படல் வேண்டும். கொள்வனவின் பொழுது காய்கறி உட்பட தரமான உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு முன்னுரிமை வழங்குதல் சிறப்பானதாகும்.

4. சிறிய சிறப்பு விற்பனைநிலைய விற்பனைகள் மூலம் கிடைக்கும் பணம் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தால் இதற்கென மக்கள் வங்கியில் திறக்கப்பட்டுள்ள வங்கிக்கணக்கில் தனியாக வைப்புச்செய்தல் வேண்டும். அத்தோடு உபகுழுக்கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கமைய பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதோடு இவ் வங்கி கணக்கிலிருந்து பொருட் கொள்வனவுகள் மேற்கொள்ளுப்படும்போது கிளைக்குழுவின் சிபார்சு பெறப்படுதல் அவசியமாகும்.

5. விலை எல்லைகளை நிர்ணயித்தல் வெவ்வேறு விற்பனைப்பொருட்களின் ஆதார எல்லை விகிதத்தை வரையறுத்தல் ஆகியன பற்றிய விலை வரையறைக்கொள்கை விற்பனை நிபந்தனைகள், விநியோகக் கொள்கைகளை இக் கிளைக் குழுக்கள் வகுத்தல் வேண்டும். அதற்கமையவே இயக்குனர்சபை விலைகளைத்தீர்மானித்தல் வேண்டும்.

6. சிறிய சிறப்பு விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கும்போது சங்கம் குறிப்பிட்ட அளவிலான பொருட்களை ஆரம்ப மூலதனமாக வழங்கவேண்டும்.

7. சிறிய சிறப்பு விற்பனை நிலையத்தின்நாளாந்த கொள்வனவு விற்பனை தொடர்பான அறிக்கை தலைமை அலுவலகத்திற்கு நாளாந்தம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

8. மாதாந்தம் இவ்விற்பனை நிலையத்தின் செயற்பாடு முன்னேற்றம் இலாபநட்டக்கணக்கு (படிவம் 32) தொடர்பில் கிளைக்குழுவில் ஆராயப்படல் வேண்டும். இலாபநட்டக்கணக்கு (படிவம் 32) தலைமை அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் 05 ந்திகதிக்கு முன்பதாக கிளைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

9. இருப்புக் கட்டுப்பாடு இக்கிளைகளில் அலகுரீதியாகவும், பெறுமதி ரீதியாகவும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். (படிவம் 20, 21) இக்கிளைகளில் காசுப்பதிவு இயந்திரம் (Cash Register) பயன்பாட்டில் இருப்பின் அவற்றின் மூலமாக இருப்பு கட்டுப்பாட்டை பேணிக்கொள்ள முடியும்.

10. கிளை நிலையங்களில் விற்பனையை அதிகரிப்பதற்காக இவ் சிறப்பு விற்பனை நிலையங்களை திறப்பது தொடர்பான நேரங்களை கிளைக்குழுக்களே தீர்மானிக்க வேண்டும். அத்தோடு கிளைகளின் மாதாந்த விற்பனை இலக்குகளை தீர்மானித்து மேலதிக விற்பனைகள் இடம்பெற்றால் மட்டும் (இலாபமும் ஏற்பட்டால் மட்டும்) கிளைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கிளைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டதன் அடிப்படையில் இலாப வீதத்தில் மேலதிக ஊக்குவிப்புக்களை வழங்கலாம்.

11. விற்பனைகளை அதிகரிக்கும் வகையில் வேண்டிய ஊக்குவிப்பு திட்டங்களை (வாடிக்கையாளர் மட்டத்தில் ) கிளைக்குழுக்கள் தயாரித்து எனது அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்தலாம்.

12. கிளைக்குழுவின் பொறுப்பும் உத்தரவாதமும்:-
கிளைக்குழு தமது செய்கடமைகளை தளராத ஊக்கத்துடனும் கடமை உணர்ச்சியுடனும் ஆற்றி சட்டத்திற்கும் இந்த உபவிதிகளுக்கும் இணங்கச்செயலாற்றுதல் வேண்டும். செய்கடமைகளில் போதிய ஊக்கம் காட்டத்தவறியதன் விளைவாகவோ அல்லது இச்சட்டத்தையும் உபவிதிகளையும் மேற்கொள்ளத் தவறியதன் விளைவாகவோ கிளைக்கு ஏற்பட்ட எந்த நட்டத்திற்கும் அல்லது தீங்கிற்கும் அல்லது தண்டனைக்கும் கிளைக்குழுவினது ஒவ்வொரு உறுப்பினரும் ஒருமித்தும் தனித்தும் பொறுப்பாளியாவார்கள்.

அ.சுப்பிரமணியசர்மா
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச்சங்கப்பதிவாளரும்(வமா)

பிரதி : 1. செயலாளர், உள்ளுராட்சி,நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு கூட்டுறவு அமைச்சு - தகவலுக்காக

2. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்,மன்னார்,வவுனியா,கிளிநொச்சி முல்லைத்தீவு - நடவடிக்கைக்காக